நாள்.10.06.2026

**அசல் வழக்கு எண். 156/2022**
**பெயர். பழனிவேல்**

**த.பெ. வடிவேல்**

**பி.வா.சா.1– வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

அண்ணாதுரை குடும்பத்துடன் ஊரில்தான் இருக்கிறார் என்றால் வெளியூரில் கேரளாவில் இருக்கிறார். இதை என் நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். அண்ணாதுரை ஊரில்தான் இருக்கிறார் வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் இல்லை. எனது நிருபண வாக்குமூலத்தில் வாய்மொழியாக கிரையம் வாங்கியுள்ளதாக சொல்லியுள்ளேன் எந்த ஆண்டு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். எவ்வளவு தொகைக்கு வாங்கினேன் என்றும் சொல்லவில்லை என்றால் ஆமாம். யாரிடம் வாங்கினேன் என்று சொல்லவில்லை என்றால் சுப்பையனிடம் வாங்கியுள்ளேன். சுப்பையனின் வாரிசுகள் யார் யார் என்றால் தெரியாது. வாதி புகார் கொடுத்து அது சம்பந்தமாக காவல்நிலையத்தில் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அண்ணாதுரைக்கு தாவா சொத்தில் உரிமை உண்டா என்றால் இல்லை. 1952 அடமான பத்திரத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

யார் அடமானம் வைத்தது என்றால் சுப்பையா. எவ்வளவு தொகைக்கு அடமானம் வைத்தார் என்ற விவரத்தை எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். அடமான பத்திரத்தின் அசலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அடமான பத்திரத்தை ரத்து செய்தார்களா என்றால் இல்லை. அந்த அடமான பத்திரத்தில் சிங்கப்பூர் செல்வதற்காக பணம் தேவைப்படுவதால் அடமானம் வைக்கிறேன் என்ற விவரம் உள்ளதா என்றால் உள்ளது. அவ்வாறு அடமான பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் என் அடமான பத்திரத்தை மீட்டதாக சொல்லியுள்ளேன் அதற்கு ஏதாவது அடமான ரத்து பத்திரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எந்த ஆண்டு அடமான பத்திரம் ரத்து செய்யப்பட்டது என்று வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். அடமான பத்திரத்திலுள்ள சொத்துகள் பாக பிரிவினை பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். யார் பாகத்தில் அடமான சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சுப்பையா. என் அப்பாவின் தம்பி. 2வதாக வாய்மொழி கிரையம் செய்துள்ளதாக சொல்லியுள்ளேன் எந்தெந்த சர்வே எண் என்றால் 127/10. எந்த ஆண்டு,

எவ்வளவு தொகைக்கு எந்த சர்வே எண் என்று எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். சுப்பையா வாரிசுகள் யார் யார் என்று வாதி சொல்லியுள்ளார் அந்த விவரம் பற்றி தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. சரோஜினி தேவி, தமிழரசி, கண்ணதாசன், கலாதேவி ஆகியோர்கள் சுப்பையாவின் வாரிசுகள் என்றால் எனக்கு தெரியாது. வாதி கிரையம் வாங்கியது தவறு பவர் பத்திரம் தவறு என்று தாவா சொத்தில் உரிமை கொண்டாட பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1965 ல் கிரையம் வாங்கிய சொத்தும் தாவா சொத்தும் ஒன்றா என்றால் ஆமாம்.

பி.வா.சா.ஆ.1 ல் எந்தெந்த சர்வே எண் உள்ளது என்றால் 97/4, 97/18, 97/14,97/17. வழக்கு சொத்தின் சர்வே எண் பி.வா.சா.ஆ.1 ல் இல்லை என்றால் ஆமாம். வாதி மோகன் கிரையம் வாங்கிய 20.01.2022 ல் தான் தவசிநாதன் மற்றும் பழனிவேல் கிரையம் வாங்கினார்கள் என்றால் ஆமாம். பழனிவேல் கிரையம் வாங்கிய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும்.சர்வே எண்.130/10. அது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் என் அனுபவத்திலுள்ளது. சர்வே எண்.130/10 பழனிவேல் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் இல்லை. பட்டா பழனிவேல் பெயரில்தான் உள்ளது என்றால் ஆமாம். எதன் அடிப்படையில் பட்டா மாற்றப்பட்டது என்றால் தெரியாது. பழனிவேல் கிரையம் வாங்கியதால்தான் அதன் அடிப்படையில் பட்டா மாற்றப்பட்டது என்றால் சரியல்ல. அதே தேதியில் கிரையம் வாங்கிய அனைவரும் அவரவர் அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் இல்லை.

பவர் பத்திரம், கிரைய பத்திரம் செல்லதக்கதல்ல என்று நான் பொய்யாக சொல்கிறேன் வாதி முறையாக பவர் பத்திரம், கிரைய பத்திரம் செய்துள்ளார்கள் அதனால் வாதிக்கு அவர் கேட்ட பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.